சொல்லப்படுகிறது. மத்திய சர்க்கார் சரியாக பண உதவி கொடுக்காவிட்டாலும், இந்த மாநில சர்க்கார் அதற்கான உதவித் தொகையைக் கொடுத்து, கிணறுகள் தோண்டுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மத்திய சர்க்கார் கொடுக்காவிட்டாலும், மாநில சர்க்கார் தன்னால் இயன்ற அளவுக்கு உதவி செய்வது என்று ஏற்கனவே முடிவு செய்து இருக்கிறது. இவ்வளவு பெரிய உணவு நெருக்கடியை சமாளிப்பதற்கு இவ்வளவு அற்புதமான திட்டத்தை மாநில சர்க்கார் வைத்திருந்தும், மத்திய சர்க்கார் அதில் அசிரத்தை காண்பிக்கிறது என்பதைத்தான் கனம் உறுப்பினர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. சகாதேவக் கண்டர்: புதிய கிணறுகள் தோண்டுவதற்குக் கடன் பெறுவதென்றால், ஜாயிண்டு பட்டா வைத்திருப்பவர்களுக்குக் கடன் வாங்குவதற்கு வசதி இல்லாமல் போய்விடுகிறது. அதைச் சரி செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அப்படிப்பட்ட வசதிகளைப் பெறுவதற்கு ஜாயிண்டு பட்டா குறுக்கிடுகிறது என்றால், கனம் உறுப்பினர் அவர்கள் அந்த யோசனையைச் சொல்லி, ஜாயிண்டு பட்டாவை தனிப் பட்டாவாக மாற்றிக் கொள்ளலாம்.

திரு. ஆலடி அருணா: கிணறு வெட்டிக்கொள்வதற்கு பத்திரத்தின் மதிப்பின்மீது கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் மூன்று கேள்விகள் இருக்கின்றன. நேரமாகிவிட்டபடியால், பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை இன்னும் ஐந்து நிமிடங்களுக்கு நீடிப்பதாக நான் அறிவிக்கிறேன்.

'பீல்ட்மென்'கள் வேலை நீக்கம்

* 50. **வின.—திரு. என். சங்கரய்யா:** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்
மு.ப. 10 00 பாரா—

(அ) தீவிர விவசாயப் பகுதி திட்டம் நிறைவேற்றப்படும் மாவட்டங்களில் தற்பொழுதுள்ள விவசாயப் பணியாளர்களில் ஒரு பகுதியினரை வேலை நீக்கம் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம், எனில், அத்தகைய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(உ) அவ்வாறு பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு மாற்று வேலை அளிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

1967 ஜூன் 22]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (உ) எவரையும் வேலையிலிருந்து நீக்கும் உத்தேசம் இல்லை. நானூற்று பதினைந்து பீல்ட்மென்கள் 1965-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்கள். 1967-ம் ஆண்டில் இந்த பீல்ட்மென் பதவிகளை இரண்டாம் நிலை கிராம நல ஊழியர் பதவிகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. இந்த 415 பேரில், கிராம சேவக் பதவிக்குத் தகுதியுடையவர்கள், அவ்வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். தகுதி இல்லாதவர்கள், ஏற்கனவே உள்ள பீல்ட்மென் பதவிகளில் தொடர்ந்து வேலை பார்ப்பார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய இந்த முடிவு பீல்ட்மென்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அத்தகைய ஆபத்தான நிலைமை இல்லாததால், அது அவசியமில்லை.

திரு. செ. பாலசுப்ரமணியன்: இந்த வேலைகளுக்கு பீல்ட்மென்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து கிராம சேவக்குகளாக அமர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஏற்கனவே அறிவித்தது போல, தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் பதவி ஏற்றபிறகு பரவலாக இப்படிப்பட்ட ஊழியர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள், அதன்பேரில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் வெளிப்புறங்களில் அரசியல் ரீதியாக சிலர் செய்துக் கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலை இருந்தால், என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அத்தகைய கிளர்ச்சிகளுக்கு ஊழியர்கள் பலியாக மாட்டார்கள்.

படகு கட்டும் திட்டம்

*51. வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மண்டபத்தில், நார்வே திட்டத்தின் கீழ், 1966--67-ல் எத்தனை படகுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது ?

(இ) அதில் எத்தனை படகுகள் கட்டி முடிக்கப்பட்டன?

(உ) அவற்றிற்கான செலவு தொகை என்ன?